தமிழ் உலகு

(புதன்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபிஸு வைகாசிமீ 18உ (31-5-'22.) | ப. 6.

ச ஞ் சீ வா ஞ் ச ன்

இது அமெரிகன் பெயின் பாம்

தலை, மார், முதுகு, இடுப்பு	வலி	தேள், பாம்புக், பூச்சிக், விஷக்	கடி	பல், கால், காது, கை	நோவு

இவைகளுக்கெல்லாம் சித்த ஔஷதம் இதுவேதான்.

(உபயோகம் மேலுக்கு மாத்திரம்).

எவ்விடத்திலும் கிடைக்கும். விலை அணா எட்டு.

ஏஜெண்டுகள் தேவை!

SANJEEVINI HOUSE,

264, MINT STREET, MADRAS.

ஆந்திர ஆயுர்வேத வைத்தியசாலை

லிமிட்டெட்.

19, ஆரிஸ் ரோட்டு, சென்னை.

டாக்டர். A. லக்ஷ்மிபதி

Founder and Managing Director.

சகல வியாதிகளுக்கும் சாஸ்திர முறைப்படி

தயாரிக்கப்பட்ட மருந்துகள் கிடைக்கும்.

கியாட்டலாக்குக்கு எழுதுங்கள்.

தபால் கூலியுள்பட சந்தா
ஒரு வருஷத்திற்கு ரூ. 5—0—0
அரை வருஷத்திற்கு ரூ. 3—0—0
'தமிழ் உலகு' கார்யாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்
மைலாப்பூர், சென்னை.

விஷய அடக்கம்.

1. ஸ்ரீமதி ஸரோஜினி தேவி ... 42
2. ஆகா கான் 43
3. மேல் நாட்டு நாகரீகம் ... 43
4. ஈசன் செயல் 44
5. சித்திரா 44
6. மாயக்கனிகள் 46

தமிழ் உலகு

துந்துபிஷு வைகாசிமீ 18உ

ஸ்ரீமதி ஸரோஜினி தேவி.

பம்பாய் நகரத்தில், இம்மாதம் 18உ யன்று நடந்த மகாத்மா காந்தியின் ஞாபகோத்ஸவத்தில், ஸ்ரீமதி ஸரோஜினி தேவி மிகவும் உன்னதமான வார்த்தைகளை மொழிந்திருக்கின்றனள். அதைப் பின்வருமாறு எடுத்துச் சொல்லுகின்றோம். "மகாத்மா என்ற அத்தெய்வ புருஷனுக்கு நான் என்ன பூஜை செய்யப் போகின்றேன்! எனதுள்ளத்தையே அவருக்கு முழுவதும் அர்ப்பணம் செய்தபிறகு நான் பின்னும் செய்யக் கூடியது என்ன? மகாத்மாவிடம் எனக்கிருக்கும் பக்தியை பற்றி இங்கு நான் சொல்லப் புகுவது பொருந்தாது. ஒவ்வொரு மாதமும் 18உ யன்று, அவர் விடுதலை யடையும் வரையில், நாம் அவ்வுத்தம புருஷனின் ஞாபகத்தைக் கொண்டாட தீர்மானித்திருக்கிறோம். ஆ! கொண்டாடுவதென்றால், அதை முற்றிலும் அறிந்தவர்களும் இருக்கிறார்களா? ஒவ்வொருதடவையும், பேசுவதில் ஸாமர்த்தியமுள்ள சிலர், ஒரே மாதிரி, ஒரே விஷயத்தை பற்றி நமக்குத் தத்வோபதேசம் பண்ணுவதற்காகவா நாம் இத்தினத்தைக் கொண்டாடுகிறோம்? கேவலம் பேசும் திறமையை காட்டுவதற்காக, அடிக்கடி நாம்கூடுவது அவரைக்கொண்டாடுவதாக ஆகமாட்டாது. ஜெயிலில் மகாத்மா காந்தி இருக்கிறார் என்றும், நாம் அவரைக் கூடிய சிக்கிரம் விடுவிக்க முயற்சி செய்வோம் என்றும், நாம் நினைப்பது முற்றிலும் நம்முடைய அஞ்ஞானமாகும். பின் என்ன? ஜெயிலில் இருப்பவர்கள் நாமே. மேலும் மகாத்மா காந்தி அடைந்திருக்கும் மோக்ஷத்தை நாம் எப்படி அடையக் கூடுமென்று யோசிக்கவே இங்கு கூடியிருக்கிறோம். கருங்கல் சுவர்களுக்குள் மாட்டிக் கொண்ட போதிலும், அவருக்குக்கிட்டி இருப்பதே மோக்ஷம்! ஒவ்வொருவரும் தன்னுடைய ஹிருதயத்தைத்தானே சோதித்துப்பார்க்க வேண்டும். தான் செய்த பிழைகளுக்காகத் தன்னிடம் மன மிரங்காமல் தானே தண்டித்துக் கொள்ளவும் வேண்டும். இங்கிருப்பவர்கள் எல்லோரும் மகாத்மாவைப்பற்றி நினைக்கத்தகுதியுள்ளவர்களா என்று தம்மைத்தாமே கண்டித்துக்கொள்ளட்டும். எனக்கு முன் பேசிய பேடல் என்பவர் நீங்கள் எல்லோரும் ஒருமாதத்தில் ஸம்பாதித்ததை இன்றையதினம் மகாத்மாவின் நிமித்தம் செலவு செய்ய வேணுமெனப் பிரார்த்தித்துக் கொண்டார். ஆனால் கேவலம் உங்களுடைய திரவியத்தை மாத்திரம் யாசிப்பதற்கு நான்விரும்பவில்லை. எனக்கு எது முக்கிய மென்றால் உங்களுடைய தபஸே. மேலும் இப்போது நாம் சந்தோஷப்படுவதற்குக் காரணமில்லை. நீங்கள் செய்ததெல்லாவற்றையும் யோசிக்குங்கால், இவ்வளவுதானா வென்று நினைக்கத், தலை நிமிராதவண்ணம், எனக்கு வெட்க முண்டாகின்றது. இந்தத் தியாகத்திற்காகவா நான் உங்களை ஸ்தோத்திரம் செய்வது தகும்? தபஸ், தியாகம், இவ்விரண்டிலும், இவ்வளவு உலோபித்தனமாக இன்றையதினம் நடந்துகொண்டதற்கு கூடியசீக்கிரம் எல்லோரும் பிராயச்சித்தம் செய்து கொள்ளட்டும்! என்னதானிருந்தாலும், அடுத்த தடவையாவது மகாத்மாவுக்காக ஜனங்கள் இன்னமும் அதிகமாய் நேர்மையாக நடக்கமாட்டார்களா? சூரிய வம்சத்திலுதித்த ரகுமஹாராஜன் கொடுத்ததுபோல், எல்லோரும் தங்களால் இயன்றபடித் தியாகம் செய்வார்களென்றே நான் நம்புகிறேன். சென்றவருஷம் தேசகைங்கர்யத்திற்காக 40 லக்ஷரூபாய் ஒரு நொடியிற்குவித்த இந்தபம்பாயில், தபசும், தியாகமும், ஒப்புயர்வில்லாது காணப்படவேண்டும். உண்மையாகவே ஜெயிலில் கிடந்து கஷ்டப்படுகிறவர்கள் நாம்! கேவலம் பயத்தாலும், அடிமைத்தனத்தாலும், அல்பசுகத்தில் நாம்வைத்த ஆசையாலும் விலங்கிடப்பட்டு நாமே தவிக்கின்றோம்! கைதியாகத் தோன்றினபோதிலும் மகாத்மாவைப்போல் யதேச்சையுடன் உலகத்தை ஆட்டிவைக்கின்றவர்கள் யார் இருக்கின்றார்கள்.? இங்கிலண்டில் மாஸிங்ஙம் என்றவர் விஷயங்களை அறிந்து கொள்ளாமல், இவ்வளவு மூடத்தனமாய்இவ்வாறு எழுதியிருப்பதற்கு நான் வருத்த மடைகிறேன். 200 வருஷகாலம் மற்றொரு தேசத்தை தயவு தாக்ஷிண்யமின்றி ஆண்டு வந்தவர்கள் சரியாக நடக்கக்கூடுமேயாகில், உலகம் இப்படி இருக்க மாட்டாது. முரட்டுப் பிடிவாதமும், திமிரும், அகங்காரமும் இவர்களுடன் கூடவேபிறந்ததுபோலும்! நமக்கும் மேல்நாட்டாருக்கும் உபமானம் உபமேயம் என்ன இருக்கின்றது? மேல் நாட்டார் தங்களுடையப் பிரயாசத்தால் உலகிற்களித்திருக்கும் பணமும் சுகமும், நம்முடைய தபஸால் நாம் கண்டு பிடித்திருக்கும் 'மோக்ஷஸாதனங்களுக்கு ஸமான மாகுமா? மகாத்மா காந்தியிடம் எல்லையற்றதோர் பக்தியை நாம் பாராட்டக்கடன்மைபட்டிருக்கின்றோம். இப்பூ மண்டலத்தில் எங்கேயாவது பிறருக்கு அடிமைப்பட்டவர்கள் இருப்பார்களேயாகில், அவர்களே நம்முடைய பந்துக்கள் என்றுமகாத்மா காந்தி நமக்கு உபதேசித்திருக்கிறார். நான் எதிர்பார்த்ததற்கு விரோதமாக இப்போது நான் காணுவதென்ன? இவ்வல்பத்தனமும், ஸ்வகார்யத்திலேயே கண்ணுயிருப்பதும் இன்றுடன் ஒழிந்துவிடு மென்று நான் எண்ணுகிறேன். மதிமயக்கத்தால் இன்றையதினம் உங்களிடம்பணத்தையாசிக்க வந்தேன்.என்ன தவறு! நான் அடுத்த தடைவையும் இங்கு வருவேனேயாகில், உங்களுடைய முழு ஆத்மசக்தியையும் நீங்கள் மகாத்மாவின் நிமித்தம் கொடுக்கவேண்டும். அப்பொழுது தான் 'மகாத்மா காந்தியைப் பற்றிப்பேசுவதற்கு நாம் தகுதியுள்ளவர்களா' வென்பது தெளிவாக விளங்கக்கூடும்."

ஆகா கான்

சமீபத்தில், இந்தியாவிலிருக்கும் மகமதியர்களின் சம்பந்தமாய்க், கிலாபத் விஷயத்தில்; இந்தியா கவர்மெண்டாரும், Rt. Hon'ble மாண்டேகுவும், ஒரே மனதுடன், துருக்கி உடன் படிக்கையை மாற்ற வேண்டுமென்று வியக்கத் தக்கதான தைரியத்துடன் வாதித்ததும், அதில் இந்தியா மந்திரி தன் வேலையை விட்டுவிடும்படி நேர்ந்ததும் நாம் நன்கறிந்தவைகளே. மகமதியர்களின் தீவிரமான கோரிக்கையை, எதுவரினும் நிறைவேற்றுவதில் இந்தியா கவர்மெண்டார் கண்ணும் கருத்துமாக இருந்தது அவர்களின் நேர்மையான குணத்தைக் காட்டுகின்றது. இப்பொழுது பாரிஸ் நகரத்திலிருக்கும் ஆகா கான் என்பவர் இதின் சம்பந்தமாகத் தன்னபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார். "இங்கிலண்டிலுள்ள ராஜ்யதந்திரிகள் மகமதியர்களின் பிரார்த்தனைகளுக் கிணங்காவிட்டால், இந்தியாவில் ஓர் பிரமாதமான பூகம்பமே உண்டாகும்." இவருடைய இந்தவார்த்தைகள் வெகுதூரம் வரையில் எட்டி, எங்கும் ஓர் பரபரப்பை உண்டாக்கியிருக்கின்றன. ஏனெனில், ஆகா கான் என்ற இவர் மகமதியர்களுக்குள் மிகவும் கௌரவமாக மதிக்கப்படுகிறார். இவருடைய அசைவதை எல்லாரும் மிக்கக்கவலையுடன் கவனித்து வருகின்றார்கள்.

"ஏழாயிரம் மைலுக்கப்பால், முப்பத்திரண்டு கோடி ஜனங்களை பிரிடிஷார் அடக்கி ஆண்டு வருவதேதன் எனில், இந்தியாவிலேயே ஆங்கிலேயர்களுக்கு உண்மையான நண்பர்கள் என்றைக்கும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் மகமதியர்கள். இதுகாறும் ஆங்கிலேயர்களிடம் பக்ஷமும் பக்தியும் பாராட்டிவந்த இவர்கள் இப்போது பிரிடிஷ் மந்திரிகளின் நடத்தையாலேயே மிகவும் வெறுப்படைந்து விட்டார்கள். இந்தியர்கள் சம்மதிக்காவிடில், எப்படித்தான் இந்தியாவை பிரிடிஷார் தங்களுக்குட்பட்ட ராஜ்யமாக எண்ணி நடத்த முடியும்? ஒருவனுக்குத் தங்க ஹாரத்தை சூட்டியும். மற்றொருவன் கழுத்தில் தூக்குக் கயிற்றைப்பூட்டியும் வந்தால், ஆங்கிலேயர்கள் நெடுங்காலம் இந்தியாவிலிருக்கவே முடியாது."

"வைஸ்ராயும், மாண்டேகுவும் மகமதியர்களின் நிமித்தம் வாதித்தது நிரம்பவும் ஸ்வல்பமே. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்காகப் பணி செய்து வந்தவர்களில் இவ்விருவர்களைப் பார்க்கிலும் உறுதியுள்ளவர்களும் ஸத்தியமுள்ளவர்களும் வேறெவருமில்லை. ஒரு ஸமயம் எப்போதாவது மாண்டேகு இந்தியாவிற்கு மறுபடியும் போக நேருமாகில், தன்னிடம் இந்தியர்கள் வைத்திருக்கும் பேரன்பை அவரே காணுவார்."

"இந்தியாவில் கிடைக்கும் வரும்படியில் அநேகமாக சரிபாதி, ஸைன்யரக்ஷணத்தில் கவர்மெண்டார் செலவழித்து வருகிறார்கள். இந்த அக்கிரமம் எங்கேயாவது நடக்குமா? இதனால் தங்களை என்றைக்கும் அடக்கி ஆளுவதற்கே ஆங்கிலேயர்கள் எண்ணுகிறார்களென இந்தியர்கள் நினைப்பதில் தவறென்ன? இங்கிலண்டிலோ, கவர்மென்டாரின் வழிகள் ஜனங்களுக்குப் பிடிக்காவிடில் அக் கவர்மெண்டைத் துலைத்து விடுவார்கள். ஆனால் இந்தியாவில் இது முடியாது. பின்பு இந்தியர்களுக்கு வழி பிறப்பது எங்ஙனம்? இரண்டு வாரம் அல்லது மூன்று மாதம், அல்லது ஓர் வருஷம் இந்தியாவில் அமைதி இருப்பது போல தோன்றும். ஆனால் பிரிடிஷ் மந்திரிகள் தங்கள் தப்பான மார்க்கத்தை விட்டு இனிமேலும் ஒழுங்காக நடக்காவிட்டால் இந்தியாவில் அமைதியின்மை உடனே உண்டாகத்தான் வேண்டும்."

"துருக்கிக்கும் க்ரீஸுக்கும் இப்போது நடந்து வரும் யுத்தவிஷயமாய் எது செப்தல் தகும்? ஆட்ரியானேபிள் என்ற ஊரைத் துருக்கர்களிடம் மீளவும் கொடுத்தலவசியம். அதை க்ரீஸ் தேசத்தவர்களிடம் ஒப்பு வித்தது ஓர் மகா பாதகமே."

"இந்தியாவில் எப்பொழுதும் ஜனங்கள் க்ஷேமமாக வாழவேண்டுமென்றால் இர [illegible] செய்யப்பட வேண்டும். அவைகளில் வரியைக் குறைப்பதே முதன்மையானது. மற்றொன்று இந்தியா கவர்மெண்டார் சிபார்சு செய்தபடி மகமதியர்களின் உரிமைகளனைத்தும் அவர்களுக்குத் திரும்பவுமளிக்கப்படுவதே."

மேல் நாட்டு நாகரீகம்

"தமிழ் உலகு" பத்திராதிபருக்கு,

ஐயா,

நமது இந்திய தேசமானது, உலகத்திலுள்ள மற்றெல்லா நாடுகளையும் விட மிகவும் மாறுதலான இயற்கையமைப்பும், மிகவும் பழமையானதுமான நாகரீகமும் படைத்த தேசமென்பது நமதனுபோக பூர்வமாகவும், நம்முடைய தேசசாஸ்திர ஆராச்சியின் மூலமாயும் நன்கு விளங்குகின்றது.

மேல் நாட்டு நாகரீகம் நமது தேசத்தில் படையெடுத்து அதனால் அடிபட்டு புத்திமயங்கிய நமக்கு பண்டைய காலத்து இந்தியாவின் சிறப்பும், வைபவமும், கல்விப் பெருக்கும், செல்வ மிகுதியும், ஜனசமூகத்தின் ஒற்றுமையும், கனவிலும் நமக்கு நினைப்பில் வரக்கூடியதாக இல்லை. மதுவை அபரிமிதமாகப் பானம்செய்யும் ஒருவன், எப்படித் தன்னுடைய பூர்வ ஞானத்தை முற்றிலும் நழுவவிட்டு, புதிதோரவஸ்தையில் ஈடுபட்டவனாய், திக்கு, திசை தெரியாமல் கஷ்டப்பட்டு மேல்மேலும் அதிலாசை கொண்டவனாய்த், தன்னுடைய அழிவைத்தானே தேடிக்கொள்கிறானோ, அது போல, நமது தேசத்திற்கு முற்றிலுமின்றியமையாததும், நமது தேசத்திற்குத் தகுந்தாற்போல் அமைந்துள்ள பழக்க வொழுக்கங்களுக்கு மிகவும் மாறுபாடானதும், நம்மை அறியாமல் நம்முடைய சக்தி, பலம், ஐசுவரியம், இவைகளை அடியோடு கவரக்கூடியதாய்த் தலைப்பட்டிருக்கும் இந்தமேல் நாட்டுநாகரீகத்தினிடை நாம் ஈடுபட்டு, நாம் நம்முடைய அழிவை வெகு எளிதில் தேடிக் கொள்ளுகிறோம்.

சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் தற்காலம் உயர்ந்த நாகரீகம் படைத்தோம் என்று சொல்லுகின்ற இந்த மேனாட்டார், இருக்க இடமின்றி, உடுக்க உடையின்றி, காடுகளில் மிருகத் தன்மையோடு கூடிய மிலேச்சர்களாகத் தானே காய் கிழங்குகளைத்தின்று ஜீவனம் செய்து வந்த காலத்தில், நம்மிந்தியா தேசத்தவர்கள் பெரிய, உன்னதமான ஸ்திதியிலிருந்ததோடு, ஆங்காங்கு பெரிய ராஜாங்கங்களை ஏற்படுத்தி, சகோதர பாவத்துடனே வசித்து வந்தது மல்லாமல், பெரியபட்டணங்களையும், வியாபார ஸ்தலங்களையு மேற்படுத்தி, ஒருதேசக்ஷேமத்திற்கு முக்கியகாரணமாயிருக்கக் கூடிய கல்வியை வியாபிக்கச் செய்ய ஒவ்வொரு முக்கிய பட்டணத்திலும், கீர்த்தி பெற்ற பலகல்லூரிகளை உண்டாக்கியதோடு, தற்காலம் காணப்படும் பலவசதிகளான தபாலென்ன ராஜபாட்டைகளென்ன, இவைகள் போன்ற பல வசதிகளை அமைத்தது மல்லாமல், இப்போது இந்திய ஜனங்களிருக்கும் நிலைமையைவிட பதின் மடங்கு மேலாக சுகஜீவிகளாகவும், செல்வவான்களாகவும், பசி, பிணி யின்றி வாழ்ந்து வந்-

தார்களென்றால், நம் பழமையான நாகரீகம் தற்காலத்திய மேல் நாட்டு நாகரீகத்தை விட இழிவுள்ளதோ? இல்லவே இல்லை.

இன்னும் நாம் நமது பூர்வ சரித்திரத்தை நன்றாய் ஆராய்ச்சி செய்வோமாயின், நம் நாட்டின் நிலவளமையையும், செல்வ மிகுதியையும், கல்வி பெருமையையும் பற்றிக் கேள்விப்பட்டு அன்னிய நாட்டின் அநேக ஜாதியினர் நம்முடைய நாகரீகத்தில் பற்றுள்ளவர்களாய் இவ்விடம் வந்து கற்றுத் தேர்ந்து சென்றார்கள். என்றால் நம்முடைய நிலைமை அக்காலத்தில் எவ்வளவு மேன்மையான ஸ்திதியில் இருந்திருக்கவேண்டும்?

இப்பொழுது நம்மையாண்டு வரும் ஆங்கிலேயர்கள் இன்னும் மற்றுமுள்ள பல ஐரோப்பிய ஜாதியினர் சுமார் 300 வருஷங்களுக்குமுன் இவ்விடம் வந்து வியாபாரம் செய்து சீமான்களாய் ஆகவேண்டுமென்ற எண்ணத்தோடு ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு இந்தியாவுக்குச் செல்ல வழி கண்டு பிடிக்கத் பிரயத்தனம் செய்தார்களென்றால் அது நமது நாட்டின் மேன்மையாலல்லவா?

மேல் நாட்டு நாகரீகமானது நமது மனதுக்கேற்பபடி இருக்கிறதென்றால் மிகவும் கொடிய விஷத்தையுடைத்தாயிருக்கின்ற ஒருசர்ப்பத்தின்மேல் தோலிலுள்ள வர்ணமயமான பளபளப்பையும் அதனுடலின் மிருதுவையும் கண்டு ஒருவன் அதின் மேலாசை கொண்டு அதைப்பிடித்து வளர்க்க எண்ணினால் அந்த சர்ப்பம் அவனுக்கென்ன கெடுதியை விளைவிக்குமோ அது போல நம் மனதிற்கிசைந்ததாயும் நம்முடைய புத்தியைக் கவரக்கூடியதாயுமிருக்கின்ற, இப்பாழும் மேல் நாட்டு நாகரீகம் நமதிந்தியமக்களிடம் குடிகொண்டிருக்கும்வரை நாமன்னியர்களுக் கடிமைகளாய் ஸ்வதந்திரமின்றி ஏழ்மைத்தன்மையோடு பசி, பிணி என்னும் பல கஷ்டங்களுக்கு ஆளாகியவர்களாய் நாம் நாசமடைவோம் என்பது திண்ணம்.

கைலாசபுரம்
திருநெல்வேலி
24—5—22 } S. S. நாரயணன்.

☞ மேலெழுதப் பட்டிருக்கும் கடிதத்திலுள்ள எண்ணங்களை நாம் ஆமோதிக்கவில்லை. ஆகினும் தற்சமயத்தில் எப்படி ஜனங்கள் பலவிதமாக நினைக்கிறார்களென்பதைக் காட்டுவதற்காகவே இதை வெளியிட்டிருக்கிறோம்.

பத்திராதிபர்.

தமிழ்உலகு பத்திராதிபருக்கு

ஐயா,

நான் நமது உலகு ஐந்தாம் பகுதியைப் படித்துவிட்டுத் உறங்கப்படுத்தும் கொசுவின் உபத்திரவத்தால் தூக்கம் வரவில்லை. உடனே எழுந்து பின்கண்டவாறு எழுதினேன். அதை மெச்சி அங்கீகரிப்பீர்களென்று நம்பும்,

தங்கள் உளறு வாயன்

ஈசன் செயல்

பிறப்பால் கொசு கேவலம் ஒரு சாக்கடைவாசி. நவீன மின்சார விசிறிகளின் விரோதி. சாக்கடைமூடி மரமற்று காற்றுலவாத இச் சென்னைமா நகரைக் காலத்தின் கொடுமையால் அது அடைந்தது. காவிரிக் கரையோரத்திலே பிறந்து வளர்ந்து செழித்து ஓங்கி வரும் பூவரசை மரத்தை மேல் நாட்டு வெள்ளம் தாக்கிப் புரட்டி நிலையில்லா நீரின் நடுவே இழுத்துக் கொண்டு போய் விட்டது போலவே, இதையும்! எல்லாம் ஈசன் செயல்!

கொசுவின் பாட்டினிடையே வருந்தி வரும் எனக்கு தூக்கமேது சுகமேது? காதடைக்கும் பாட்டிலோ தூக்கம் வரும்? பொறுமையை யழித்து இயல்பையும் மாற்றுவது இக்கொசுவின் பாட்டு. அதின் நடுவே வாழ்வதே என் துயரம்! எல்லாம் ஈசன் செயல்!

முப்பது நிமிஷங்களுக்கு முன் ஒரு ஏக போகப்படுக்கையிலே நார் கட்டிலிலே மேல் மெத்தையிலே நான் படுத்தேன். சுழன்ற கண்ணை மூடினேன். மெதுமை மாறாத் தலையணை மேல் சாய்ந்தேன். எழுந்து, பாடிய கொசுவை யோட்டினேன். அது புகுந்த மூக்கை நோண்டினேன். கைதட்டி வீசினேன். சூழ வலையிட்டுப் படுத்தேன். உடன் அழித்துக் கைகொட்டி ஓட்டினேன். தட்டிப் பிடித்துத் தேய்த்தேன். காலில்பட்ட புண்ணையும் மறந்து சொரிந்தேன். மறுபடி உறங்கப் படுத்தேன். பின்னும் முகம் சிவக்க எழுந்து படுக்கையை இடம் மாற்றினேன். பொழுது சென்றும் தூங்காதவன் ஆனேன். விசிறிக்கட்டையைக் கையில்எடுத்தேன். தூங்கி வழிந்து பக்கத்தில் படுத்திருந்த குழந்தையைக் கட்டையால் அடித்தேன். அது அழ, தட்டிக் கொடுத்து தூங்கென்றேன். முதுகோடும் இடுப்போடும் குறங்கோடும் அப்பிக் கொண்ட கொசு ஓடத் துள்ளிக்குதித்தேன். மறுபடியும் கொசு வலையைக்கட்டினேன்; படுத்தேன். ஓடும் வண்டியின் ஒலி கேட்டு விழித்தேன். நாய்க் குட்டிகள் குரைக்கக்கோபம் கொண்டேன். படுக்கையிலிருந்துஅலறி எழுந்த என் செல்ல பிள்ளையை வைதேன். இதுவும் ஈசன் செயல்!

இப்படியே வாசலில் சாக்கடை வெள்ளம் பெருகி என் குறட்டை யுறக்கத்தை அழிக்கலாயிற்றே? அற்பக் கொசுவால் என்முன்னோர் அடையாத துயரம்அடைந்து தூங்காத "அலுவல்" பார்க்கவோ நான் பள்ளி கொண்டேன். சாக்கடைக்கொசுவும் என் உயிர் நிலையில் அப்படியே பற்றியது. ஓங்கி வளர்ந்த தென்னையிலே பொந்திட்டுக் கூடுகட்டிக் காற்றோடு உலவி வரும் பச்சைக் கிளி மரமேறியின் கையில் பிடிபட்டுக் கைதியானாற் போல்! நானும் கொசுவும்! ஈசன் செயல்!

சித்திரா.

(முகவுரை)

மகா பாரதத்திலிருந்து பின் வரும் கதையை ஆதாரமாகக்கொண்ட இச்சிறு நாடகம் சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்குமுன் எழுதப்பட்டது. தான் பூண்ட ஓர் விருதத்தை நிறைவேற்றுவதன் பொருட்டுத் தீர்த்தயாத்திரியாய் சஞ்சரித்த அர்ச்சுனன் மணிபுர மென்ற நகரையடைந்தான். அங்கு, அவ்விராஜ்யத்தின் அரசன் சித்திரவாஹனனென்பவனுடைய குமாரி அழகு வாய்ந்த சித்திராங்கதை யென்னும் பெண் மணியைக்கண்டு காதல் கொண்டவனாய், அவளைத் தனக்கு விவாஹம் செய்து கொடுக்கும்படி அவன் அவ்வரசனைக்கேட்க, சித்திரவாஹனனும், பாண்டு புத்திரனை அர்ச்சுனன் அவனென்பதை யறிந்து பின் வருமாறு கூறினான்.

"என் முன்னோர்களில் பிரபஞ்சனென்னும் பெயர்கொண்ட அரசரொருவர் வெகுகாலம் குழந்தையில்லாமையால் துக்கமுற்றுக் கடுந்தவம் புரிந்தபொழுது, அத்தவத்தைக்கண்டு மெச்சி பரமசிவன், அவரும், அவர் சந்ததியார் ஒவ்வொருவரும் தவறாமல் மக்கட் பேறு பெறுவாரென்று வரமளித்தார். அப்படியே ஒவ்வொருவருக்கும் ஓராண் குழந்தை யுண்டாக, நான் மட்டும்தான் முதன் முதல் ஒரு பெண் மகளை யடைந்தவன். அவளை ஓர் புத்திரனாகவே பாவித்து எனக்குப் பிற்காலம் அவளே இவ்விராஜ்யத்தை யாளவேண்டுமென நிச்சயித்திருக்கிறேன். அவளுக்குப் பிறக்கும் குமாரன்தான் என் வம்சத்தை விருத்தி செய்பவனாகவேண்டும். சித்திராங்கதையை நீர் விவாஹம் செய்துகொள்ள விரும்பினால், இவ்

வேற்பாட்டிற்கிசைந்த பிறகே செய்து கொள்ள முடியும்.''

இதற்குச் சம்மதித்து, அர்ச்சுனன் அவ்விராஜ குமாரியை மணம் புரிந்து, மூன்று வருஷகாலம் அவ்விடமே வசித்தான். ஒரு புத்திரன் பிறந்ததும், அவன் அவளை அன்புடன் முத்தமிட்டு, அவள் தந்தையிடமும் செலவு பெற்று மீண்டும் தன் தேசசஞ்சாரத்திற்குப்புறப்பட்டான்.

ஸீன் I.

சித்திரா—பஞ்ச பாணங்களையுடைய மன்மதன் தாம் தானா?

மன்மதன்—ஆம், சிருஷ்டி கர்த்தாவான பிரும்மாவினுடைய ஹிருதயத்தில் முதன்முதல் உத்பவித்தவன் நான்தான். ஸ்திரீ புருஷர்களுடைய ஜீவியங்களை, சந்தோஷம், துக்கம் இவைகளாகிய பந்தங்களில் சேர்த்துக்கட்டுவதும் நானே.

சித்திரா—எனக்குத்தெரியும். அத்துக்கம் எப்படிப்பட்டதென்றும், அப்பந்தங்கள் எவை யென்பதையும், நான் நன்றாய் அறிகின்றேன்.—ஐயா, தாம் யாரோ?

வஸந்தன்—நான் அவருடைய தோழனாகிய வஸந்தன். என்னை ருதுக்களின் அரசனெனக் கூறுவார்கள். இறப்பும், கிழத்தன்மையும், இவ்வுலகத்தையே க்ஷீணிக்கச் செய்வதினின்றும் நான்தான் எப்பொழுதும் சென்று தடுக்கின்றேன். என்றும் அழியாயௌவன பருவம் எனக்குண்டு.

சித்திரா—நான் தங்களுக்கு வந்தனம் செய்கின்றேன்.

மன்மதன்—அழகிய பெண்மணியே, ஆனால் நீ மேற்கொண்டிருக்கும் கடுமையான விருதமென்ன? உனது ம்ருதுவான யௌவனத்தை இவ்விதம் தவத்தினால் கிலேசம் செய்து, நீ ஏன் வீணாக்குகிறாய்? மன்மதனைப் பூஜிப்பதற்கு இது யுக்தமல்லவே! நீ யார்? நீ வேண்டும் வரம் யாது?

சித்திரா—மணிபுரத்தரசனுடைய குமாரி சித்திரா யென்பவள் நான். லோகேசுவரனான பரமசிவன் என் பாட்டனாருக்கு, அவர் வம்சத்தார் ஒவ்வொருவரும் தவறாமல் புத்திர பாக்கியத்தைப் பெறுவாரென்று வாக்களித்திருந்தார். அப்படியிருந்தும், அத்தெய்வீகமான வார்த்தை என் தாயினுடைய கர்ப்பத்திலிருந்த சிறு ஜீவனைமாத்திரம் மாற்ற சக்தியற்றதாய்ப் போயிற்று. ஒரு ஸ்திரீயாயிருப்பினும் என் பெண் தன்மையானது அவ்வளவு உறுதியுள்ளதாகவே யிருந்தது.

மன்மதன்—ஆகவேதான் உன் தந்தை உன்னை ஓர் புத்திரனை வளர்ப்பதுபோல் வளர்க்கிறாரென்பதை யறிந்தேன். வில்வித்தை முதலியவைகளையும், ஒரு அரசனுக்குரிய கடமைகளையும் அவருனக்குக் கற்பித்திருக்கிறாரல்லவா?

சித்திரா—ஆம். இக்காரணத்தால்தான் நான் ஒரு ஆடவனின் வேஷத்தையும் தரித்து, ஓர் யுவதிக்கு யுக்தமான அந்தப்புர வாஸத்தையு மொழித்தேன். பிறரை வசீகரிக்கும் ஸ்திரீ விலாசங்கள் ஒன்றையும் நான் அறியேன். நாணேற்றி, வில்லை வளைக்கக்கூடிய பலத்தை என் கைகள் பெற்றிருக்கின்றன. ஆனால், மன்மதனுடைய் பாணமான கடைக்கண் பார்வையை ஒருபோதும் நான் கற்றுக்கொள்ளவில்லை.

மன்மதன்— அதைக்கற்றுக் கொள்ளவேண்டிய அவசியம் கொஞ்சமேனுமில்லை. பெண்மணியே சிக்ஷையில்லாமலேயே கண் தன் வேலையைச் செய்யும் சக்தி வாய்ந்தது. ஹிருதயத்தில் ஊடுருவிப் பாய்ந்து புண்பட்டவர் யாரென்பதும் அதற்கு நன்றாய்த் தெரியும்.

சித்திரா—ஒருநாள் பூர்ணா நதிக்கரையோரமாயிருக்கும் வனத்தில் என்மனதை விநோதப்படுத்தும்பொருட்டு நான்தனியே சஞ்சரித்துக் கொண்டிருந்தேன். ஒரு மரத்தடியில் என் குதிரையைக்கட்டிவிட்டு, மான் ஒன்றைத் துரத்தி, நான் அவ்வடர்ந்த காட்டிற்குள் புகுந்தபொழுது, கிளைகள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருந்த மரங்களினிடையே ஓரிருண்ட மெலிந்த பாதை என் கண்ணுக்குத் தோற்றியது. நானதைத் தொடர்ந்து சென்றதும், திடீரென, சில உலர்ந்த இலைகளின்மேல் மனிதன் ஒருவன் அப்பாதையில் குறுக்காகப் படுத்திருப்பதைக் கண்ணுற்றேன். அப்புறம் நகர்ந்து எனக்கு வழிவிடும்படி நான் இறுமாப்புடன் கூற, அவன் அதை யொன்றும் சிறிதும் லக்ஷியம் செய்யவில்லை. பிறகு நான் மிகுந்த இகழ்ச்சியுடன், கூர்மையான என் வில்லின் முனையினால் அவனைக் குத்தவே, உடனே சாம்பற்குவியலினின்றும் திடீரெனக்கிளம்பும் நெருப்புஜ்வாலை போல், அவன் கிளம்பி யெழுந்து நின்றான். எனது அதியிளமைத் தோற்றத்தைக்கண்டோ, அல்லது மற்றெதனாலோ, அவனுதடுகளில் ஒரு சிறு புன்னகை அரும்பியது. என் ஜீவியத்தில் முதன்முதல் அப்பொழுதுதான் நான் ஒரு ஸ்திரீ யென்பதையும், என்முன் நிற்பது ஒரு புருஷன் என்பதையும் உணர்ந்தேன்.

மன்மதன்—அப்புண்ணிய காலத்தில்தான், நான் ஸ்திரீ புருஷர்கள் இருவருக்கும், அவர்கள் தங்களையே யறிந்து கொள்வதான அபூர்வவிஷயத்தை போதிக்கின்றேன். அதற்குப் பிறகு நடந்ததென்ன?

சித்திரா— ஆச்சரியத்துடனும் பயத்துடனும், 'நீர்யார், என்று நான் வினவ, அதற்கவன், "நான் அர்ச்சுனன்; பெருமை பொருந்திய குரு வம்சத்தைச் சேர்ந்தவன்," என்றான். இவ்வுத்தரத்தைக் கேட்டு, ஒரு கற்சிலைபோல் அசைவற்றவளாய் நான் அவனுக்கு மரியாதை செய்யவும் மறந்து விட்டேன். எனது ஸ்வப்னங்களிலெல்லாம் நான் போற்றி பாவித்த மூர்த்தியான அர்ச்சுனன் என்பவர் இவர்தானா? ஆம். வெகுகால முன்னமேயே அவர் எவ்விதம் பன்னிரண்டு வருஷகாலம் பிரும்ம சரிய விருதத்தை மேற்கொண்டாரென்பதை நான் கேள்வியுற்றிருக்கிறேன். எவ்வளவோ தடவை உருமாறித் தனியாய் அவருடன் போர்புரிந்து என்கைத்திறமையை அவருக்குக் காட்ட நான் ஆசைப்பட்டதுண்டு. ஆஹா, மூட ஹிருதயமே! உனது மனோராஜ்யங்களெல்லாம் எங்கு பறந்தன? மேன்மையான பல நோக்கங்களையுடைய இவ்விளமையைக் கொடுத்து, அதற்கு பதிலாக அவர் காலடியிலிருக்கும் தாசியாகமட்டும் நான் மாறமுடியுமானால் அதைவிட நான் பெறும் பேறியாது; என்னென்ன யோசனைகளில் நான் என்னையே மறந்து நின்றேனோ அறியேன். திடீரென மரங்களுக்கிடையே அவர் மறைவதைக் கண்ணுற்றேன். அறிவிழந்தவளே, நீ அவரை வரவேற்கவுமில்லை. அவருடன் ஒரு வார்த்தையேனும் பேசி, அவர் மன்னிப்பை வேண்டினாயில்லை. உன்னை இகழ்ச்சி செய்து அவர் செல்லும்பொழுது, நீ ஒரு நாகரீகமற்ற மூடஜனம் போலன்றோ மௌனமாய் நின்றாய்! மறு நாட் காலை நான் என் புருஷ வேஷத்தைக் களைந்து, ஸ்திரீகளுக் குரிய பல ஆபரணங்களையணிந்து, சிவப்பு கலந்த உயர்ந்த பட்டாடையும் தரித்துக்கொண்டேன். வழக்கத்திற்குவிரோதமாயணிந்த அவ்வாடையானது, என் இழிவைக் கண்டு பரிகசிப்பதுபோல் தோன்றியது. ஆயினும் நான் அர்ச்சுனனைத்தேடமுயற்சிகொண்டவளாய், சஞ்சரிக்கும்பொழுது, அவரை இவ்வனத்திலிருக்கும் சிவன் கோவிலில் கண்டேன்.

மன்மதன்—உன் வரலாற்றை முழுவதும் சொல்லி முடி. நான் ஹிருதயத்திலிருந்து தோன்றிய வஞ்சனையால், மனதால் தூண்டப்படும் இச்சிறு செய்கைகளினுடைய மாயத்தை நன்கறிவேன்.

சித்திரா—நான் என்ன கூறினேன் என்பதும், அவரதற்கென்னபதிலுரைத்தாரென்பதும், அவ்வளவு சரியாய் என் ஞாபகத்திலில்லை. எல்லாவற்றையும் கூறும்படி, என்னைத்தாங்கள் கேட்கவேண்டாம். அவமானமானது ஒரு இடிபோன்று என்மேல் விழுந்தும், என்னை நூறு சுக்கல்களாகச் செய்ய சக்தி வாய்ந்திருக்கவில்லை. அவ்வளவு கடினமாய், புருஷனென்றே எண்ணும்படியாய் நானிருக்கிறேன். என்னிருப்பிடத்தை நோக்கி நான் திரும்பும்பொழுது, அவர் கடைசியாக மொழிந்த சொற்கள் என் காதுகளில் பழுக்கக்காய்ச்சிய சலாகை போல் குத்தின. 'பிரும்ம சரியவிருதத்தை மேற்கொண்ட நான் உனக்குத்தகுந்தகணவனல்ல!' ஆஹா, அப்புருஷனின்விருதமல்லவோ விருதம். உண்மையாய், ஹே, அனங்க தேவா, கணக்கற்றயோகிகள் ரிஷிகளும் தங்கள் ஆயுட்காலம் வரை புரிந்த தவத்தின் பலனை ஒரு ஸ்திரீயின் பாதத்தினடியில் சமர்ப்பித்திருப்பது தமக்குத்தெரியாததல்லவே! என் வில்லை இருதுண்டாக ஒடித்து நான் என் அம்புகளையும் நெருப்பில் எறிந்து விட்டேன். நாணேற்றுவதா லுண்டான வடுக்களுடன் கூடிய என் உறுதியுள்ள கரத்தைக் காணவும் எனக்கு வெறுப் புண்டாகிறது. ஐயா, என் புருஷபலத்தைப் பற்றியுள்ள வீண் கர்வத்தைத் தாம் ஒரு நிமிஷத்தில் கீழே வீழ்த்திவிட்டீர். தமது காலடியில் எனது போர்த் திறமையாவும மிதியுண்டு கிடக்கின்றன. இனி உமது பாடங்களை எனக்குக் கற்பியும். பலமற்றவர்களுடைய சக்தியையும், ஆயுதமற்றவர்கள் தரிக்கு மாயுதத்தையும் எனக்களியும்.

மன்மதன்—நானின்று முதல் உன் நண்பனாயிருந்து இம் மூவுலகங்களையும் ஜயிக்க வல்லனான அர்ச்சுனனை, உன்னை அவன் மீறிய குற்றத்தின் தண்டனையை யனுபவிக்க, ஒரு கைதியாய் உன்முன் கொண்டுவருவேன்.

சித்திரா—நான் வேண்டும் காலம் மட்டும் கிடைக்கப் பெற்றேனாயின், நாளடைவில் அவர் ஹிருதயத்தைக் கவர்ந்து விடுவேனென்ற நம்பிக்கை எனக்குண்டு. ஒரு தேவதையினுடைய உதவியும் எனக்கப்பொழுது வேண்டியதில்லை. ஒரு வில்லாளியாய் நான் அவர் பக்கத்தில் எப்பொழுதும் நின்று, யுத்த முனைக்கு அவரைக் கொண்டு செல்லும் ரதக்குதிரைகளை ஓட்டுவேன். அவர் வேட்டையாடும்பொழுது, கூடச்சென்று, அச்சந்தோஷத்தை அனுபவிப்பதுடன், அவர் தூங்கும் பொழுது ஒருவரும் தீங்கு செய்யா வண்ணம் காவல் புரிந்து கொண்டிருப்பேன். ஒரு க்ஷத்திரியனுக்குரிய உயர்ந்த தர்மங்களில் நான் அவருக்குதவி செய்து, ஆதரவற்றவர்களைக் காப்பாற்றுவதிலும், அதர்மம் செய்வோரைத் தகுந்தபடி தண்டிப்பதிலும், துணை நிற்பேன். "இச்சிறுவன் யார்? முன் ஜன்மத்தில், என் ஊழியக்காரர்களா யிருந்தவருள் ஒருவன் இஜ்ஜன்மத்திலும் என் நற்கருமங்கள் போல என்னைப் பின் தொடர்ந்து வந்திருக்கின்றானோ," வென்று அவர் ஆச்சரியத்துடன் என்னை நோக்கித் திகைக்கும் காலமும் ஒரு நாள் கிட்டுமல்லவா? பிறவியிலேயே, வைதவ்யம் நேர்ந்தவளைப் போல மௌனமாய்த் தனிமையில் என் மனோ துக்கத்தை யாற்றி, இரவு தோறும் கண்ணீர் ஆற்று வெள்ளம் போல் பெருகப் பகலில் பிறர் அறியாமலிருக்கப் புன்னகை புரியும் முகத்துடன் நாட்களைக் கழிக்கப் பட்டவள் நானல்ல. எனது ஆசையென்னும் புஷ்பமானது பழமாய் மாறும் காலும் வருமுன் ஒருபோதும் பூமியின் மீது வீழ்த்தப் படலாகாது. ஆயினும் தன்னுடைய உண்மையான தன்மையறிந்து மதிப்புண்டாகச் செய்வதற்கும் ஒருவருடைய ஆயுட்காலம்முழுவதும் வேண்டிய தவசியமாகும். ஆகவேதான் உலகத்தையாளும் மன்மதரே—ஐயா, ருதுக்களின் அரசனான வஸந்ததேவரே நான் தங்கள் முன்னிலையில் இப்பொழுது நிற்கின்றேன். பிறரை வசீகரிக்கும் திறமையுள்ள சௌந்தரியமானது எனக்கு மறுதளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வபகாரத்தை என் மேனியிலிருந்து எடுத்துவிடும். என் ஹிருதயத்தில் திடீரெனத் தளிர்த்து மலர்ந்த காதல் எவ்வளவழகாய்த் தோன்றுகிறதோ, அதுபோல, என்னையும் ஒரு நாளாயினும் இணையற்ற சௌந்தரியத்துடன் விளங்கச்செய்யும். ஒரே ஒருநாள் ஒப்புயர்வற்ற ரூபலாவண்யம் எனக்குக் கிட்டட்டும். பிறகு நடக்கவேண்டியவைகளுக்கு நான் உத்தரம் சொல்லுகிறேன்.

மன்மதன்—நீ வேண்டும் வரம் உனக்குக்கிட்டுமாக.

வஸந்தன்—மிகக் குறைந்த நேரத்தையுடைய ஒரு நாளைக்கல்ல; ஒரு வருஷ முழுமையும் வசந்த காலத்தில் மலரும் புஷ்பங்களுடைய லாவண்யமானது உன் சரீரத்தை அலங்கரிக்கட்டும்.

மாயக் கனிகள்.

முன்னொரு காலத்தில் மிகவும் அழகான ராஜகுமாரன் ஒருவன் இருந்தான். அவனுடைய தகப்பனார் தன் பிள்ளைக்கு கல்யாணம் செய்து பார்க்க மிக்க ஆசைகொண்டவராய், தினந்தோறும் 'குழந்தாய், நீ என் இன்னும் தக்க மனைவியைத் தேடாமலிருக்கிறாய்?' என்பார். ஆனால் அரசிளங்குமாரனோ, ராஜகன்னிகைகளை அலட்சியம் செய்பவனாய், ஒரு பெண்ணையும் வரிக்கவில்லை. கடைசியில் ஒரு நாள் பிதாவின் சொற்களால் சலிப்புண்டவனாய் பின் வருமாறு சொல்லலானான். 'தந்தையே, நீர் எனக்கு கல்யாணம் செய்து பார்க்க ஆசைப்படுகிறீர். ஆனால் என் மனதிற்கிசைந்த பெண்ணொருவளும் நமது ராஜ்யத்திலில்லை. இஷ்டமிருப்பின், நான் இப்பூமண்டலத்தைச் சுற்றிவந்து, எந்தப்பெண் மிகவும் அழகு வாய்ந்தவளாயும், புத்திசாலியாய் என் மனதிற்குப்பிடித்தவளாயிருக்கின்றனளோ, அவளையே எனது ஆசைக்காதலியாக வரித்து வருகிறேன்.'

அரசனுடைய ஆனந்தத்திற்கு ஓரளவில்லை. அவன் தனது பிள்ளையின் தீர்மானத்தைக்கேட்டு சந்தோஷித்தவனாய், அவனுடைய யாத்திரைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். ராஜகுமாரனும் வெகு உத்ஸாகத்துடன் பிரயாணம் புறப்பட்டான். தடங்கல்கள் ஒன்றுமில்லாமல் யாத்திரையும் சுகமாகவே யிருந்தது. சீக்கிரத்தில் அவன் ஒரு சமுத்திரக்கரையை அடைந்து, அங்கிருந்த 'மரக்கலத்தில் ஏறிச்சென்றான். மூன்றிரவு கப்பலிலிருந்து நான்காவது நாட்காலையில் ஒரு தீவை யடைந்து மறுபடியும் குதிரை மேலேறி பனியால் மூடப்பட்ட பிரதேசத்தில் அதிக சிரமத்துடன் சிறிது தூரம் சென்றான். அப்பால் அவனொரு சிறு குடிசையை அடைந்து கதவை தட்டினான். கதவு திறக்கப்பட்டதும், தும்பைப்பூ போல நரைத்த மயிரையுடைய ஓர் கிழவி வெளிவந்து 'யாரப்பா நீ? இங்கு உனக்கென்னவேண்டும்' என்றனள். 'நான் கல்யாணம் செய்துகொள்வதற்காக மிகவும் அழகு

வாய்ந்த ஒரு சிறுமியை நாடி இங்கு வந்தேன். அவ்விதப் பெண்ணை எங்கு காணலாமென்று சொல்வாயா?' என்றான் அரசிளங்குமாரன். 'அப்பா, உனக்கேற்ற பெண் எனது நாட்டிலில்லை. நான் பனிக்கால தேவதை. எனக்குக் கல்யாண விஷயங்களைப்பற்றிப்பேச ஒழிவு இல்லை. என் தங்கையான சரத்கால தேவதையிடம் செல். அவள் ஒருக்கால் உன் மனதிற்கிசைந்த மங்கையை யளிப்பாள்.' எனக்கூறி, கதவை தாளிட்டாள் அக்கிழவி.

ராஜகுமாரன் தன் பிரயாணத்தை துடங்கி வெகுதூரம் சென்று, பனி மறைவதும், வழியில் நேர்த்தியான பழங்களுடன் கூடிய பலவித மரங்களை கண்ணுற்று சரத்கால தேவதையின் நாடு அடைந்தான். அங்கு ஓர் குடிசையில் கருத்த விழிகளையுடைய சிறு பெண்ணொருவளைக் கண்டு, அருகே சென்று தனது எண்ணத்தை அறிவித்தான். சரத்கால தேவதையாய அப்பெண் இவனது விருப்பத்தை முடித்துவைக்க இயலாது அவனது தங்கையான கோடைக்கால தேவதையிடம் போவென அரசகுமாரனை ஏவினுள். பிறகு குதிரை ஏறி அவன் தன் வழியே சென்றான். இப்பொழுது இளஞ்சூரியனது கிரணங்கள் பட்டு பூமியெல்லாம் பார்வைக்கு வெகு நேர்த்தியாயிருந்தது. வழி நடுவே சிவந்த மேனியாளான ஓர் பெண்மணியை அணுகி, தனது நோக்கத்தை தெரிவித்து, அக்கோடைகால தேவதையாலும் தன் கோரிக்கை நிறைவேற்றக் கூடாது, மறுபடி முன்போல் சொல்வானுயினன். சிறிது நேரத்திற்கெல்லாம் பசுமையான புல் நிறைந்த மைதானங்களும், புஷ்பங்கள் மிகுந்த மரங்களும், இங்குமங்கும் தாவிக்குதித்து ஆகாயத்தில் பறக்கும் அநேகவிதமான பறவைகளும் காணப்பட்டன. எங்கு பார்த்தாலும் மல்லிகை, முல்லை, ரோஜா, ஜண்பகம் முதலிய செடிகள் புஷ்பங்களை சொரிந்தன. அவ்வித நந்தவனத்தின் மத்தியிலிருந்த விடுதி ஒன்றைப்பார்த்து அதன் வாயிலை அடைந்து, கதவை திறக்கும்படி தட்ட மின்னல்கொடி போன்ற ஒரு ஸ்திரீ வெளிவந்து, 'என்ன வேண்டும்' என்று வினவினுள். ராஜகுமாரன் 'நான் ஒரு மனைவியை நாடி இங்கு வந்தேன். உனது சகோதரிகள் யாவரும் எனக்கு உதவி புரிய மறுத்துவிட்டார்கள், ஆகையால் நீ எப்படியாவது என் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும்' என்றான். உடனே அவள் தனது சகோதரிகளைப்போல் அல்லாது 'சரி, நான் உனக்கு உபகாரம் செய்கிறேன். நீ உள்ளே வந்து உட்காரு. இந்தப்பக்ஷணங்களை புசி' என்றாள்.

ராஜகுமாரன் அதிக ஆவலுடன் உள்ளே சென்று புசித்தபின், வஸந்த தேவதை மூன்று மாம்பழங்களையும், ஒரு வெள்ளிக்கத்தியையும், தங்கக்கிண்ணியையும் எடுத்துவந்து, 'ராஜகுமாரா, நான் உனக்கு மூன்று மாயக்கனிகளைத் தருகிறேன். இவைகளை எடுத்துச் சென்று உனது தகப்பனர் வீட்டின் முன்னிருக்கும் ஓடையை அடைந்தவுடன் வெள்ளிக் கத்தியால் முதல் மாம்பழத்தைச் சீவு. உடனே அழகான யுவதி ஒருவள் தோன்றி ஜலம் வேண்டுமென்று உன்னிடம் கேட்பாள். நீ இத்தங்கக் கிண்ணத்தில் தண்ணீர் எடுத்து அவளுக்கு கொடுப்பாயேயாளுல், அவள் உன்னோடு மனைவியாக இருப்பாள். ஆனால் நீ கொடுப்பதற்கு தயங்குவாயாகில் அவள் மறைந்து விடுவாள். மறுபடியும் நீ அவளைக் காண முடியாது. அவளை இழக்கும் படியான துரதிருஷ்டம் உனக்கு நேருமாகில் இரண்டாவது பழத்தைச்சீவு. மறுபடியும் வேறு ஒரு பெண் தோன்றி அருந்த நீர் கேட்பாள். அவளையும் நீ சாந்தப் படுத்தாமலிருந்தால் அவளும் மறைந்து விடுவாள். பிறகு மூன்றாவதான கனியைச் சீவினால் அதிலிருந்தும் ஒருத்தி தோன்றி முன்னிருவரைப் போல் அருந்த நீர் கேட்பாள். அவளையும் நீ விட்டுவிடுவாயேயாகில் இல்லைலகில் உனக்கு மனைவியே கிடையாது' என்றாள். ராஜ குமாரன் வெகு கவனத்துடன் இவ்வார்த்தைகளைக் கேட்டு, அவள் கொடுத்த பொருள்களை எடுத்து வீட்டிற்குத் திரும்பினான்.

சில நாட்கள் கழிந்த பின் அரண்மனை முன்னிருக்கும் ஓடையை நெருங்கினான். அரச குமாரன் அங்கே குதிரையை விட்டுக் கீழிறங்கி முதல் மாம்பழத்தை நடுங்குகின்ற கைகளால் நறுக்கினான். உடனே ரதிபோன்ற ஒரு யுவதி தோன்றி 'அரசிளங்குமாரா, எனக்குத் தாகமாயிருக்கிறது. அருந்த நீர் கொடுப்பாயா?' என்று கேட்டாள். ஆனால் அவன் வஸந்தை சொன்ன வார்த்தைகளை மறந்து, அப் பெண்மணியின் அழகைப் பார்த்தவண்ணமே திகைத்திருந்தான். அந்த ராஜ குமாரி வெறுப்புடன் மறைந்து விட்டனள். பாவம்! ராஜகுமாரன் மிகவும் பரிதபித்தான். தன்னையே வைது கொண்டான். மறுபடி மற்றொரு பழத்தை நறுக்கிய வுடன் மற்றொரு யுவதி தோன்றினாள். மறுபடியும் அவன் காரியத்தை மறந்து வாய் திறந்த வண்ணமே அவளை நோக்கி நின்றான். அந்தோ! அவளும் மறைந்து விட்டனளே.

மூன்றுவதான மாம்பழம் நறுக்கப் பட்டவுடன் இவ்விருவர்களைக்காட்டிலும் பதின் மடங்குஅழகு வாய்ந்த கன்னிகை யொருவள் வெளிப்பட்டாள். ராஜ குமரானும் இப்பொழுது தயங்காமல் அவள் கேட்டதும் தண்ணீரைக் கிண்ணத்தில் எடுத்துக் கொடுத்தான். தன் தாகம் தீர்ந்ததும் ராஜகுமாரி அவனது அருகில் வந்து உட்கார்ந்தாள். உடனே அவன் அவளை தனக்கு மனைவியாகும்படி விரும்ப, அவளும் இசைந்தனள். பிறகு ராஜகுமாரன் எழுந்துகொண்டே 'பெண்ணே, என்ன அழகாயிருக்கிறாய். நீ தான் உலகத்திலுள்ள பெண்களிலெல்லாம் சிறந்தவள். நீ சற்று இங்கிருப்பாயானால் நான் எனது அரண்மனைக்குச் சென்று உனக்கு பட்டாடைகள் கொண்டுவருகிறேன். என் பிதாவின் முன் நீ இப்படி சாதாரண உடை உடுத்துப் போகலாகாது' என்று சொன்னான். முதலில் சற்றுத் தயங்கின போதிலும் பிறகு அவனுக்குப் போக விடையளித்தாள். உடனே தன்னுடைய அரண்மனையை நோக்கி விரைந்து சென்றான்.

இதற்குள் ராஜகுமாரி தனியாக இருக்க அச்சமுற்று, ஓடையின் சமீபத்திலிருந்த மரத்திலேறி ஒளிந்து கொண்டாள். சிறிது நேரத்திற் கெல்லாம், கருத்த விகாரமான வேலைக்காரி யொருவள் குடத்துடன் ஜலமெடுக்க அவ்வோடைக்கு வந்தாள். மரத்தின் மேலிருந்த ராஜகுமாரியின் பிரதிபிம்பம் ஓடையில் காணவே, அவள் சுற்றி முற்றும் பார்த்தாள். யாரும் அவளுக்குத் தென்படாமல், அது தன்னுடைய முகத்தின் பிரதிபிம்பமே யென நினைத்து ஆனந்தத்துடன் 'ஆகா; என்ன அழகாயிருக்கிறேன் எனது எஜமானி என்னைப்பார்த்து கருப்பி, பூதம், என்று சொல்லுகிறாளே. அது முற்றிலும் பிசகு. அவள் என்னுடைய அழகைக்காண சகியாமல் இவ்விதம் சொல்லுகிறாள். நான் நீர் மொண்டு வருவதற்குத் தகாதவள்' எனச்சொல்லி அக்குடத்தை அங்கேயே போட்டுடைத்துவிட்டோடினாள்.

அவளது யஜமானி 'ஜலமெங்கே?' என்று கேட்டவுடன், அவள் 'அம்மா, நான் வெகுரூபவதியாயிருப்பதால் ஜலமெடுக்க தக்க வளல்ல' வென்று நினைத்து குடத்தைப் போட்டுடைத்து

[…]டேன்' என்று பரபரப்புடன் அவ்வேலைக்காரி பதில் கூறினாள். யஜமானியும் ஆச்சரியமடைந்து, 'நீயா அழகி! கரும்பிசாசே, உனக்கு ரூபம் வேறையா' வென கருப்பியை நன்றாய்ப் புடைத்தாள். மறுபடியும்வேறு குடங்கொண்டு ஜலமெடுக்க அவள் ஓடையை அடைந்து முகத்தை ஜலத்தில் பார்த்து 'நான் தான் ரூபத்தில் மேம்பட்டவள், என்றால் ஜலம் கொண்டுபோக முடியாது தான்' எனக்குதிக்க, மரத்திலிருந்த ராஜகுமாரி அடக்க முடியாமல் கொல்லென்று சிரித்தாள். கருப்பிமரத்தின் மேலிருந்தபெண்ணை கண்ணுற்று 'அழகு வாய்ந்த பெண்ணே, நீ ஏன் மரத்தில் பதுங்கியிருக்கிறாய்?' என்றாள். அதற்கு ராஜகுமாரி தன் நாயகனை ராஜகுமாரன் பட்டாடைகளுடன் வருவதை எதிர்பார்த்திருப்பதாக பதிலளித்தாள். அவ்வேலைக்காரி உடனே 'உன் தலைமயிர் அலங்கோலமாய் கிடக்கிறதே. நான் வாறிவிடட்டுமா?' என அன்புடன் சொல்வது போல் கேட்டனள். ராஜகுமாரி அதற்கு சம்மதித்தவுடன்; அவள் மரமேறி ஒருநீண்ட ஊசியை எடுத்து ராஜகுமாரியின் தலையில் குத்தினாள். கீச்சென்று கதறி அப்பெண்மணி மறைந்து போனாள். மறுபடியும் வேலைக்காரி அவளுக்காகப் பார்த்தபோது ஓர் வெண்மையான புறா அழுது கொண்டே போவதைக்கண்டு அவ்விடத்திலே உட்கார்ந்து ராஜகுமாரன் வரவை எதிர்பார்த்திருந்தாள் வேலைக்காரி. ராஜகுமாரனும் அதிசீக்கிரத்தில் அங்கு வந்து 'எங்கிருக்கின்றாய் கண்ணே?' என்று அழைத்து சுற்றித்தேடினான். "இதோ இருக்கிறேன்" என்று நமது கருப்பி மரத்திலிருந்து பதிலுரைத்தாள்.

(தொடரும்)

சுதேசியமானது!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு 0—6—0	டப்பி 1-க்கு 0—2—0	டப்பி 1-க்கு 0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

காஞ்சீபுரம் கருடசேர்வை

விளம்பரங்கள்.

நாளது வைகாசிமீ உற்சவத்தில் ஏராளமான ஜனங்கள் வெளியூர்களிலிருந்து சேருவார்கள். அக்காலத்தில் துண்டு பிரசுரங்கள், நோட்டீசுகள், படமுள்ள விளம்பரங்கள் முதலியன வீடுவீடாகவும் முக்கிய இடங்களிலும், வினியோகப்படுத்தி வியாபாரவிருத்தி செய்வதற்கு தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். விவரங்களுக்கு போதுமான தபால் முத்திரைகளுடன் எழுதவும்.

MADRAS ADVERTISINGS
(சென்னை விளம்பரங்கள்).
10, VENKAIER STREET, MADRAS.

வேண்டும்

அளவு 27" × 17" மேற்படாத பிரகடனங்கள்

ஜட்காவண்டி

மேற்கூரையில் ஒட்டுவதற்கு

நூற்றுக்கு
தினத்திற்கு ரூ. 5-0-0
வாரத்திற்கு ரூ. 21-0-0

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் D. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' காரியாலயத்தில் R. பஞ்சாபகேசையரால் பிரசுரிக்கப்பட்டது.